S.P. Krishnamoorthy D.R.E.,
98422 97223
93450 97223
97505 30998
SINCE 1979
Nikon
HARISON Photo Products
FLASH & CAMERA SERVICE
All Brand Digital Cameras, Flash, Umbrella Lights & Lens Service Etc.,
52, Elango Nagar, Sathy Road, ( Near Balaji Meter Service),
Gandhipuram Coimbatore - 641 044.
E-mail : nikonflashandcameraservice@gmail.com

RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த வகுத்தலும் வல்ல தரசு" திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE திங்கள் நவம்பர் 24 * 2025 * மலர் -1 * இதழ்-176* VOL-1 * ISSUE-176 விலை ரூ.3 * பக்கம் -4

### 2 ஆயிரம் பேருக்கு மட்டுமே அனுமதி:

# காஞ்சிபுரம் அருகே பொதுமக்களுடன் விஜய் நேற்று சந்திப்பு!

**★கரூர் சம்பவத்துக்குப் பிறகு முதல் முறையாக பங்கேற்றார்;**
**★தனியார் கல்லூரி வளாகத்தில் பலத்த பாதுகாப்புடன் நடந்தது!!**

சென்னை, நவ.24

கரூர் சம்பவத்துக்குப் பிறகு முதல் முறையாக காஞ்சிபுரம் அருகே பொதுமக்களுடன் விஜய் சந்தித்து பேசினார். கரூர் சம்பவத்துக்குப் பிறகு முதல் முறையாக இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றார். இதையடுத்து தனியார் கல்லூரி வளாகத்தில் பலத்த பாதுகாப்புடன் நடந்தது.2 ஆயிரம் பேருக்கு மட்டுமே அனுமதி அளிக்கப்பட்டது.

விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகம்2026ஆம்ஆண்டு நடைபெறவுள்ள தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு தனது தேர்தல் அறிக்கையைத் தயாரிக்கும் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது.

இதற்காக கட்சி தலைவர்கள் ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ் அதிகாரிகளுடன்ஆலோசனைசெய்து வருகின்றனர். மாநில வளர்ச்சி, வேலை வாய்ப்பு, கல்வி, சுகாதாரம்போன்றமுக்கியமான விஷயங்களில் பொது மக்களுக்கு பயன் தரும் திட்டங்களை உருவாக்குவது தொடர்பான ஆலோசனைக் கூட்டங்களை நடத்தி வருகின்றனர்.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு கரூரில் நடைபெற்ற நிகழ்வில் ஏற்பட்ட அசம்பாவித சம்பவத்தைத் தொடர்ந்து, மிகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுடன் தமிழக வெற்றிக் கழகத்தலைவர் விஜயின் மக்கள் சந்திப்பு நிகழ்ச்சி காஞ்சிபுரத்தில் நடைபெற்றது. திறந்தவெளி பொதுக் கூட்டங்களுக்குப் பதிலாக, பாதுகாப்பை மையப்படுத்தி உள்ளரங்கு கூட்டமாகத் திட்டமிடப்பட்ட இந்நிகழ்ச்சி, காஞ்சிபுரம் மாவட்டம் சுங்குவார்சத்திரத்தில் உள்ள ஒரு தனியார் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.



கூட்ட நெரிசலைத் தவிர்க்கும் வகையில், முன்கூட்டியே தேர்வு செய்யப்பட்ட 35க்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த சுமார் 2,000 பேர் மட்டுமே இதில் பங்கேற்க அனுமதிக்கப்பட்டனர்.

பொதுமக்களை பாதுகாப்பாக அழைத்து வர தவெக சார்பில் தனி வேன்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. இவர்களுக்கு பிரத்யேக 'க்யூ ஆர்' குறியீட்டுடன் கூடியநுழைவுச்சீட்டுகள் வழங்கப்பட்டிருந்தன. காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்ட நிலையில், நுழைவு வாயிலில் கியூ ஆர் கோடு தீவிர பரிசோதனைக்குப் பின்னரே உள்ளே அனுமதிக்கப்பட்டனர்.

நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பொதுமக்கள் மற்றும் கட்சி நிர்வாகிகளிடம் தலைவர் விஜய் நேரடியாகக் கலந்துரையாடி, அவர்களின் குறைகளைக் கேட்டறிந்தார்.

கரூர் சம்பவத்திற்குப் பிறகு பாதுகாப்பு விஷயத்தில் தவெக கூடுதல் கவனம் செலுத்தி வருகிறது.

இதன் ஒரு பகுதியாக, பொதுக்கூட்டங்கள் மற்றும் பேரணிகளை நிர்வகிக்க 18 ஓய்வுபெற்ற காவல்துறை உயர் அதிகாரிகள் (டிஜிபி மற்றும் ஏடிஜிபி அந்தஸ்து கொண்டவர்கள்) அடங்கிய ஒரு சிறப்புக் குழுவைவிஜய்அமைக்க உள்ளார்.மேலும், கட்சியின் 'தொண்டர் அணி' உறுப்பினர்களுக்குச் சென்னையில் உள்ள தனியார்கல்லூரியில் ஓய்வுபெற்ற காவல்துறை அதிகாரிகளைக் கொண்டு கூட்ட மேலாண்மை குறித்து சிறப்புப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

இன்றைய நிகழ்விலும், பயிற்சி பெற்ற தவெக தொண்டர்கள் மஞ்சள் நிறச் சீருடை, தொப்பி அணிந்து பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டனர். விஜய்க்குத் தனிப்பட்ட பாதுகாப்பிற்காகத்துபாயிலிருந்து வரவழைக்கப்பட்ட 'பவுன்சர்கள்' அரண் அமைத்திருந்தனர்.

பொதுவாக அரசியல் தலைவர்கள் மக்களைத் தேடிச் சென்று சந்திப்பதே வழக்கம். ஆனால், தவெக கேட்கும் இடங்களில் காவல்துறை அனுமதி கிடைப்பதில் உள்ள சிக்கல்கள் மற்றும் பொதுவெளியில் கூடும் கூட்டத்தைச் சமாளிப்பதில்உள்ளசவால்கள்காரணமாக, விஜய் இது போன்று மக்களை வரவழைத்துச் சந்திக்கும் 'உள்ளரங்கு' முறையைக் கையில் எடுத்துள்ளதாக அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர்.

கடந்த செப்டம்பர் மாதம் கரூரில் நடைபெற்ற கூட்டத்தில் ஏற்பட்ட நெரிசல் மற்றும் உயிரிழப்புச் சம்பவங்கள் ஏற்படுத்திய தாக்கத்தினால், "நமக்கு நாமே பாதுகாப்பு" என்ற அடிப்படையில் இந்தத் தீவிர பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகக் கட்சிவட்டாரங்கள்தெரிவிக்கின்றன.

காஞ்சிபுரத்தைச் சுற்றியுள்ள 35க்கும் மேற்பட்ட கிராமங்களில் இருந்து பொதுமக்கள் மற்றும்கட்சிநிர்வாகிகள் உள்ளிட்டோர் இதில் பங்கேற்றார்கள். .

கிராம மக்கள் நீண்ட நாட்களாக சந்தித்து சொல்ல நினைத்த தங்களின் பிரச்சினைகளை, இந்த சந்திப்பின் போது விஜயிடம் நேரடியாக எடுத்துரைத்ததாக கூறப்படுகிறது.

கரூர் கூட்டநெரிசல் சம்பவத்திற்கு பிறகு இந்த மக்கள் சந்திப்பு, கட்சிக்கும் பொதுமக்களுக்கும் இடையிலான தொடர்பை மேலும் வலுப்படுத்தும் ஒரு முக்கிய நிகழ்வாக பார்க்கப்படுகிறது.

### தி.மு.க.விடம் கூடுதல் தொகுதிகள் கேட்டு

# காங்கிரஸ் குழு சென்னையில் நேற்று ஆலோசனை!

## மு.க.ஸ்டாலினுடன் அடுத்த வாரம் சந்திப்பு!!

சென்னை, நவ.24–

தி.மு.க.வுடன் தொகுதி பங்கீடு குறித்துப் பேச அமைக்கப்பட்ட காங்கிரஸ் குழு சென்னையில் இன்று ஆலோசனை நடத்தியது. அப்போது சட்டசபை தேர்தலில் போட்டியிட தி.மு.க.விடம் கூடுதல் தொகுதிகள் கேட்க முடிவு செய்யப்பட்டது. இக்குழு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை அடுத்த வாரம் சந்திக்க திட்டமிட்டுள்ளது.

தமிழக சட்டசபைக்கு அடுத்த ஆண்டு 2026–ல் தேர்தல் நடைபெறவுள்ளது. அதற்கான பணிகளில் அரசியல் கட்சிகளும், தேர்தல் ஆணையமும் தீவிரமாக உள்ளன. தி.மு.க. சார்பில் கடந்த தேர்தல்களில் அமைக்கப்பட்ட கூட்டணியே தொடர்கிறது.

இக்கூட்டணியில் காங்கிரஸ், வி.சி.க., ம.தி.மு.க., கம்யூனிஸ்டு உள்ளிட்ட கட்சிகள் இடம் பெற்றுள்ளன.

இந்நிலையில் காங்கிரஸ் கட்சியின் தலைவர்கள் கடந்த தேர்தலை விட வருகின்ற சட்டசபை தேர்தலில் காங்கிரஸ் கட்சி கூடுதல் தொகுதிகளில் போட்டியிட வேண்டும். மேலும் ஆட்சி அதிகாரத்தில் பங்கு பெற வேண்டும் என வலியுறுத்தி வந்தன.

இதற்கிடையே சமீபத்தில்நடிகர்விஜய்தொடங்கிய த.வெ.க.வுடன் காங்கிரஸ் தலைவர்கள் மறைமுகமாக தொடர்பு கொண்டு கூட்டணி குறித்து பேச்சுவார்த்தை நடத்தியதாக செய்திகள் வெளியாகின. இதனால் தி.மு.க. கூட்டணியில் இருந்து வெளியேறி த.வெ.க.வுடன் காங்கிரஸ் கூட்டணி அமைக்கும் என வதந்தி பரவியது.

இதை தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை மறுத்தார். இதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் தி.மு.க.வுடன் தொகுதி பங்கீடு குறித்து பேச காங்கிரஸ் மேலிடம் 5 பேர் கொண்ட ஒருங்கிணைப்புக் குழுவை அமைத்தது. அதில் அகில இந்திய காங்கிரஸ் பொதுச்செயலாளர் கிரிஷ் சோடங்கர், கட்சித் தலைவர்கள் சூரஜ் ஹெக்டே, நிவேதித் ஆல்வா, தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை, சட்டமன்ற காங்கிரஸ்தலைவர்எஸ். ராஜேஷ்குமார் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். இந்த அறிவிப்பை அகில இந்திய காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே நேற்று வெளியிட்டார்.

இந்நிலையில் கிரிஷ் சோடங்கர் தலைமையிலான 5 பேர் கொண்ட காங்கிரஸ் குழு இன்று சென்னை சத்தியமூர்த்தி பவனில் கூடியது.

அவர்கள் தமிழ்நாடு காங்கிரஸ்தலைவர்செல்வப்பெருந்தகை மற்றும் கட்சி நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்தினார்கள்.

கடந்த 2021 சட்டசபை தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் இடம்பெற்றுள்ள காங்கிரஸ் கட்சி 25 தொகுதிகளில் போட்டியிட்டது.

அதில் 18 தொகுதிகளில் வெற்றி பெற்றது. இந்நிலையில் வரஇருகின்ற சட்டசபை தேர்தலில்கூடுதல்இடங்களை கேட்க இந்த ஆலோசனைகூட்டத்தில்முடிவு செய்யப்பட்டதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

மேலும் காங்கிரஸ் மேலிடம் அமைத்துள்ள இந்த 5 பேர் கொண்ட குழு அடுத்தவாரம் தி.மு.க. தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலினை சந்திக்க முடிவு செய்துள்ளது. அப்போது மு.க.ஸ்டாலின் மற்றும் கூட்டணிதலைவர்களையும் சந்திப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

### வேனில் இருந்து இறக்கும் போது

# மாடு முட்டி இறைச்சிக்கடை தொழிலாளி பலி!

## தூத்துக்குடியில் பரிதாபம்!!

நெல்லை, நவ. 24–

தூத்துக்குடியில் மாடு முட்டியதில் பலத்த காயமடைந்தஇறைச்சிகடைதொழிலாளிபரிதாபமாக இறந்தார்.

தூத்துக்குடி தாளமுத்து நகர் தாமஸ் நகரைச் சேர்ந்தவர் தாஜுதீன் மகன் பட்டாணி (40), இவர் ஜாகீர் உசேன் நகரில் மாட்டு இறைச்சி கடை நடத்தி வருகிறார்.

இவரது கடையில் அங்குள்ள கே.வி.கே நகரை சேர்ந்த செல்லையா மகன் மாரிமுத்து (43) என்பவர் வேலை பார்த்து வந்தார். இந்த நிலையில் இன்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் நேற்று இரவு வெளியூரிலிருந்து இறைச்சிக்காக மாடுகளை வேனில் கொண்டு வந்தனர். அதன்பின்னர்கடையில்கொண்டு வந்து மாடுகளை இறக்கிக் கொண்டிருந்தனர். அதில் ஒரு மாடு திமிறியதால் அதை பிடிக்க மாரிமுத்து முயன்றுள்ளார்.

அப்போது மாடு கொம்பால் முட்டியதில் மாரிமுத்துக்கு வயிறு பகுதியில் பலத்த ஏற்பட்டு சுருண்டு விழுந்தார். அவரை மீட்டு உடனடியாக தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர்கள் வழியிலேயே மாரிமுத்து இறந்து விட்டதாக தெரிவித்தனர்.

இந்த சம்பவம் குறித்து தாளமுத்து நகர் போலீசார் வழக்கு பதிந்து, இன்ஸ்பெக்டர் இருளப்பன் விசாரணை நடத்தி வருகிறார்.





திமுக மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் அருண்ராஜ் தனது பிறந்தநாளையொட்டி திமுக மாநில இளைஞரணி அமைப்பாளரும், தமிழக துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின் , அமைச்சர் எ.வா.வவேலுவையும் சந்தித்து வாழ்த்து பெற்றார்.



உடுமலை – மூணாறு சாலையில் கம்பீரமாக நடந்து வந்த ஒற்றை காட்டு யானையை படத்தில் காணலாம்.

### உடுமலை – மூணாறு சாலையில்

# கம்பீரமாக நடந்து வந்த காட்டுயானை!

## சுற்றுலா பயணிகள் பாதுகாப்பாக செல்ல வனத்துறை வேண்டுகோள்!!

உடுமலை,நவ.24–

திருப்பூர் மாவட்டம், உடுமலை அருகே தமிழக கேரளா எல்லைப் பகுதியில் அமைந்துள்ளது சுற்றுலாத்தலமான மூணாறு இந்த பகுதிக்கு நாள்தோறும் வெளியூர் மற்றும் வெளி மாவட்டம் வெளி மாநிலங்களில் இருந்து அதிக அளவில் சுற்றுலா பயணிகள் வருவது வழக்கம்.

இந்த சுற்றுலா பயணிகள் உடுமலை மூணாறு செல்லும் சாலை அடர்ந்த வனப்பகுதிக்கு நடுவே அமைந்துள்ளதால் இந்த வனப் பகுதியில் இருந்து அடிக்கடி வனவிலங்குகள் வெளியேறி தண்ணீர் அருந்துவதற்காக சாலையை கடந்து செல்வது வழக்கம்.

குறிப்பாக யானைகளில் நடமாட்டம் அதிக அளவில் காணப்படும்.

இந்நிலையில் உடுமலை அருகே உள்ள வனத்துறை சோதனைச் சாவடி அருகே வனப்பகுதியில் இருந்து சாலைக்கு வந்த ஒற்றைக் காட்டு யானை சாலையில் கம்பீரமாக நடந்து சென்றுள்ளது.

இதை கண்ட வனத்துறையினர் வனசாலையில் செல்லும் பொழுது வனவிலங்குகளை கண்டால் வாகனங்களை நிறுத்தக்கூடாது எனவும் வனவிலங்குகளுக்கு அருகே சென்று புகைப்படங்கள் எடுக்கவோ வனவிலங்குகளை தொந்தரவு செய்யக்கூடாது என எச்சரிக்கை விடுத்து அனுப்பி வருகின்றனர்.





## வாணியம்பாடி

# இந்தியன் வங்கி கிளை சார்பில் வங்கி செயலிகள் குறித்து வாடிக்கையாளர்களுக்கு விழிப்புணர்வு!

வாணியம்பாடி, நவ.24

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி இந்தியன் வங்கி கிளை சார்பில் வங்கியின் செயலிகள் குறித்து விழிப்புணர் கூட்டம் வங்கி வளாகத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு இந்தியன் வங்கி கிளை மூத்த மேலாளர் பாரதி நாராயணன்

தலைமை வகித்தார். அனுராக் முன்னிலை வகித்தார். வாடிக்கையாளர்கள் சேவை பணியாளர் ஜனனி அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் வங்கியின் கிளை மேலாளர் ஆர்.மதன் குமார் IndSMART மற்றும் IndUPI வங்கியின் செயலிகள் குறித்தும் அதன் பயன்பாடு குறித்து வாடிக்கையாளர்களுக்கு எடுத்து கூறினார்.

நிகழ்ச்சியில் சரஸ்வதி உட்பட வங்கி அதிகாரிகள், பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர். முடிவில் வாடிக்கையாளர்கள் சேவை பணியாளர் தமிழ்வானன் நன்றி கூறினார்.

## புதுக்கோட்டை அருகே

# இடி மின்னல் வெள்ளம்,தீ,சுனாமி குறித்து மாணவர்களுக்கு விழிப்புணர்வு!



புதுக்கோட்டை,நவ.24

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அருகே உள்ள கீரமங்கலம் அரசு ஆண்கள் மேல் நிலைப் பள்ளியி ல் பூகம்பம் குறித்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக விழிப்புணர்வு பள்ளி வளாகத்தில் நடை பெற்றது.

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அருகே உள்ள கீரமங்க லம் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி யில் பூகம்பம் குறித்த முன்னெச்சரிக்கை நடவடிக் கையாக சமூக ஆர்வலர் மற்றும் பள்ளியின் சார்பில் விழிப்புணர்வு வழங்கப்பட்டது.

விழிப்புணர்வுக்குபள்ளியின்தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர் ஆசிரியைகள் முன்னிலையில் நடைபெற்றது.

இடிமின்னல், வெள்ளம், மழை, தீ, சுனாமி, புயல், நிலநடுக்கம், பருவநிலை மாற்றத்தினால் ஏற்படும் அழிவுகள், வைரஸ் சா ல் ஏற்படும் ஆபத்துக்கள் மேலும் பேரிடர் தொடர்பான நிகழ்வுகள் குறித்து பள்ளி மாணவர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

மேலும் பேரிடர் மேலாண்மை விழிப்புணர்வு குறி த்து ராஜ்கு மார் மழை பெய்தாலும் இடி மின்னல் காற்று பூகம்பம் தீ இ வைகளுக்கு சிறு குழந்தை களாகிய மாணவர்கள் நீங்கள் முன்னெச்சரிக்கையாக எப்படி நடந்து கொள்ள வேண்டும்.

ஆபத்திலிருந்து தப்பிப்பது எப்படி ?என்பது குறித் து விளக்க மாக சமூக ஆர்வலர் ராஜ்குமார் விளக் கி எடுத்துரைத்தார். நிகழ்ச்சியில் மாணவர்கள் ஆசிரியர் ஆசிரினயைகள் அலு வலக பணியா ளர்கள் சமூக ஆர்வலர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற கோரி

# ஆட்சியர் அலுவலகத்தில் தமிழ்நாடு செவிலியர்கள் மேம்பாட்டு சங்கத்தினர் போராட்டம்!




திருப்பத்தூர் நவ.24

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தமிழ்நாடு செவிலியர்கள் மேம்பாட்டு சங்கம் சார்பில் ஏழு அம்ச கோரிக்கைகளை நிறைவேற்ற கோரி தமிழக அரசு எதிராக கண்டன கோஷங்கள் எழுப்பி மாலை நேர தர்ணா போராட்டம் நடைபெற்றது.

இந்த தர்ணா போராட்டத்தின் முக்கிய கோரிக்கைகளாக இதில் உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசு செய்துள்ள மேல்முறையீடு வழக்கை கைவிட வேண்டும், நடைமுறையிலிருந்து பறிக்கப்பட்ட செவிலியர் கண்காணிப்பாளர் தரம் 3 பணியிடங்களை மீண்டும் உருவாக்க வேண்டும், தேர்தல் வாக்குறுதி 356யை உடனடியாக நிறைவேற்ற வேண்டும், MRB தேர்வாணையம் மூலம் பணியமர்த்தப்பட்ட தொகுப்பூதிய செவிலியர்கள் அனைவரையும் பணி நிரந்தரம் செய்ய வேண்டும்,

11 மாத கால ஒப்பந்த பணி முறையை அறவே ஒழிக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கண்டன கோஷங்கள் எழுப்பப்பட்டது.

இந்த போராட்டத்தில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் செயலாளர் பாண்டியன், பொருளாளர் ராஜ்குமார், நில அளவை துறை மாவட்ட பொருளாளர் வினோத் வட்ட கிளை பொறுப்பாளர் பிரபாகரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

தமிழ்நாடு செவிலியர்கள் மேம்பாட்டு சங்கத்தின் நிர்வாகிகள் மகாலட்சுமி, அர்ச்சனா, கவிபிரியா, தமிழரசி, கீதா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## துபாய்:

# சிறந்த ஹோட்டல்கள் மற்றும் ரிசார்ட்களுக்கு விரிவான வழிகாட்டி வெளியீடு!

சென்னை , நவ.24

மொத்தம் 819 ஹோட்டல்கள் மற்றும் 1.52 இலட்சத்துக்கும் மேற்பட்ட விடுதி அறைகள் கொண்ட துபாய், உலகின் முன்னணி சுற்றுலா பயணி மையமாக தன்னுடைய முன்னிலை நிலையை மேலும் வலுப்படுத்துகிறது. அல்ட்ராலக்சுரி ரிசார்ட்கள் முதல் நகர்ப்புற சிக் ஹோட்டல்கள், கடற்கரை ஓய்வு மையங்கள், பாலைவன லக்சுரி விடுதிகள் வரை—குடும்பங்கள், தம்பதியர் மற்றும் தனி பயணிகள் அனைவருக்கும் துபாய் தனித்துவமான தங்கும் அனுபவங்



களை வழங்குகிறது. உயர்நிலை வசதிகளை விரும்புவோருக்கு அட்லாண்டிஸ் தி ராயல், ஜுமெய்ரா மார்ஷா அல் அரப், தி லானா போன்ற ஹோட்டல்கள் உலகத் தரமான வடிவமைப்பு, சிறப்பு உணவகங்கள் மற்றும் கண்கொள்ளாக் காட்சிகளுடன் பிரீமியம் அனுபவத்தை வழங்குகிறது. ஆல்இன்குளூசிவ், நலவாழ்வு மையம் மற்றும் குடும்ப நண்பர் ரிசார்ட்கள் துபாயின் மற்றொரு பெரிய பலம். ஜேஏ தி ரிசார்ட், ரிக்சோ தி பாம் துபாய் போன்ற பல்வேறு உணவகங்கள், விளையாட்டு, பொழுதுபோக்கு மற்றும் ஓய்வு வசதிகளுடன் முழுமையான விடுமுறை அனுபவத்தை வழங்குகிறது. நலவாழ்வு மைய பட்ட பயணிகள் எஸ்.எல்.எஸ் துபாய், ஜீரோ ஒன் ஜா பீல் போன்ற இடங்களில் புதிய தலைமுறை ஃபிட்னஸ், ரிகவரி மற்றும் ஸ்பா அனுபவங்களைப் பெறலாம். குடும்பங்களுக்காக அட்லாண்டிஸ், தி பாம் மற்றும் லெகோ லேண்ட் ஹோட்டல் ஆகியவை முழுமையான தீம் அனுபவத்தை வழங்குகிறது.

பல்வகை விருப்பங்களை வழங்கும் துபாய், கடலோர, நகரம் அல்லது பாலைவனம்—எங்கு விரும்பினாலும் பயணிகளுக்கான சரியான தங்குமிடத்தை உறுதி செய்கிறது.

## தோரணம்பதியில்

# காவல் துறையினர் குற்றத் தடுப்பு விழிப்புணர்வு!



திருப்பத்தூர் நவ.24

திருப்பத்தூர் மாவட்ட காவல்கண்காணிப்பாளர் வி. சியாமளா தேவி உத்தரவின் பேரில், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றத்தடுப்பு பிரிவு உதவி ஆய்வாளர் சீதா தோரணம்பதி கிராமத்தில் செயல்படும் சமுதாய கூடத்தில், மக்கள் கல்வி மற்றும் பொருளாதார முன்னேற்ற மையம் அரசு சாரா தொண்டு நிறுவனத்தின் தொழிற்சார் பயிற்சியில் கலந்து கொண்ட 35க்கும் மேற்பட்ட பெண்களுக்கு, விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இந்த விழிப்புணர்வுப் பயிற்சியில் கலந்து கொண்ட பெண்களுக்கு பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களில் இருந்து தங்களைத் தற்காத்துக் கொள்ளுதல், 181, 1098, 100, 1930 ஆகிய உதவி எண்கள், காவல் உதவி செயலி பயன்பாடு, ஆபத்துக் காலங்களில் காவல்துறையின் உதவியை எவ்வாறு பெறுவது, இணைய வழி குற்றங்களைத் தடுக்கும் முறைகள் ஆகியவைகள் குறித்து விழிப்புணர்வு வழங்கப்பட்டது.

## ஆலங்குடியில்

# குழந்தைகள் தின விழாவையொட்டி மாணவர்களுக்கு லஞ்ச் பேக்!



புதுக்கோட்டைநவ.24

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடியில் புனித அற்புதா மா தா அரசு உதவி பெறும் நடுநிலைப்பள்ளி குழந்தைகள் தின விழாவை முன்னிட்டு பள்ளி மாணவ மா ணவிகளுக்கு லஞ்ச் பேக் வழங்கும் நிகழ்வு காலை வழிபாட்டில் நேற்று வழங்கப்பட்டது

பள்ளியின் தாளாளர் மற்றும் அருட் தந்தையர் குழந்தைராஜ் தலைமையில் நடந்தது பள்ளியின் த லைமை ஆசிரியர் சூ சைராஜ் முன்னிலை வகிக்க சக ஆசிரியர் ஆசிரியைகள் இ ணைந்து சுமார் 700 க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகளுக்கு லஞ்ச் பேக் வழங்கப்ப ட்டது.

# பா.ஜ.க. ஓபிசிஅணி மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

தர்மபுரிநவ.24

தர்மபுரி மதுராபாய் திருமண மண்டபத்தில் சேலம் கோட்டத்திற்கு உட்பட்ட சேலம், நாமக்கல், தர்மபுரி, கிருஷ்ணகிரி ஆகிய 4 மாவட்டங்களை சேர்ந்த பாஜக OBC அணி மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட பொதுசெயலாளர் பெரியசாமி தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாநில தலைவர் டாக்டர் . வீரதிருநாவுக்கரசு கலந்து கொண்டு நிர்வாகிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

இதில் கட்சியின் கொள்கைகள் மற்றும் செயல்திட்டங்கள் குறித்தும், உலகின் ஒப்பற்ற தலைவர் பிரதமர் நரேந்திரமோடி அவர்களை பாராட்டியும், வரும் 2026 தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலில் பாஜாக அதிமுக உள்ளடக்கியதேசியஜனநாயககூட்டணி200தொகுதிகள் வெற்றி பெற்று தமிழகத்தில் ஆட்சி அமைக்கும் என தெரிவித்தார்.



திருநாவலூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் தமிழக அரசின் மூலம் விலையில்லா இலவச மிதிவண்டிகள் வழங்கும் விழா நடைபெற்றது.விழாவில் உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் A.J.மணிக்கண்ணன் மாணவ, மாணவிகளுக்கு மிதிவண்டி வழங்கி கல்வியில் சிறந்து விளங்க வேண்டும் என்றும் இந்த வருடம் 100 சதவீத விழுக்காடு தேர்ச்சி பெற வேண்டும் என்று அறிவுரை வழங்கினார்.

## அன்னியூர் கிராமத்தில்

# ரமணந்தாங்கள் ஏரிக்கரையில் 150 மரக்கன்றுகள் நடும் விழா!

### ஊராட்சி மன்ற தலைவர் தொடங்கி வைத்தார்!!



விக்கிரவாண்டி நவ.24

விழுப்புரம்மாவட்டம்,விக்கிரவாண்டி வட்டம், அன்னியூர் கிராமத்தில் உள்ள ரமணந்தாங்கள் ஏரிக்கரையில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஷேக் அப்துல் ரகுமான் அவர்களின் ஆணைக்கிணங்க, கூடுதல் ஆட்சியர் பத்மஜா ஆலோசனை,

வட்டார வளர்ச்சி அலுவலர் பரிந்துரையின் பெயரில், அன்னியூர் ஏரிக்கரையை பலப்படுத்தும் நோக்கில் மரம் வளர்ப்போம் மழை பெறுவோம் எனும் உன்னத நோக்கில் 150 மரக்கன்றுகளை ஊராட்சி மன்ற தலைவர் பிரேமா குமரன் தலைமையின் கீழ் மரக்கன்று நடும் விழா நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஊராட்சி மன்ற செயலாளர் செந்தில் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தார்.

அதனை தொடர்ந்து 100 நாள் வேலை திட்டத்தில் ஈடுபடும் பணித்தள பொறுப்பாளர்கள்

அன்னியூர் கிராம பொதுமக்கள் இணைந்து மரக்கன்றுகளை நட்டு சிறப்பித்தனர்.

## 18 அம்ச கோரிக்கையை நிறைவேற்றக்கோரி

# நில அளவை அலுவலர்கள் சங்கம் காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டம்!



திருப்பத்தூர் நவ.24

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், தமிழ்நாடு நிலஅளவை அலுவலர்கள்சங்கத்தினர் 18 அம்சகோரிக்கையை நிறைவேற்றக் கோரி திருப்பத்தூர் மாவட்ட துணைத்தலைவர் பூபதி தலைமையில் காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மேலும், நில அளவர்களாக ஒருமுறை தரம் இறக்கப்பட்ட குறுவட்ட அளவர் பதவியை, மேல் தரம் உயர்த்தி வழங்க வேண்டும், துணையாய்வாளர் ஆய்வாளர்கள் ஊதிய முரண்பாட்டை களைத்திட வேண்டும், புதியதாக அறிவித்துள்ள நகராட்சிக்கு நகரசார் ஆய்வாளர் பணியிடங்களை நிரப்ப வேண்டும், ஒப்பந்த முறையில் உரிமம் பெற்ற அளவர்களை நியமிப்பதை முற்றிலும் கைவிட்டு காலம் முறை ஊதியத்தில் பணி அமைத்திட வேண்டும் என 18 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டம் நடத்தினர்.

மேலும் இதில் திருப்பத்தூர் மாவட்ட நில அளவை அலுவலர் சங்கம் சார்பில் 50க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

உடன் இந்த போராட்டத்தின்போது திருப்பத்தூர் கோட்டத் தலைவர் பனிமலர், மாவட்ட இணை செயலாளர் அசோக் குமார், மாவட்ட பொருளாளர் வினோத் குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## வாணியம்பாடியில்

# பந்தல் அமைப்பாளருக்கு ரூ.5 கோடி ஜி.எஸ்.டி வரி நோட்டீஸ்!

வாணியம்பாடி, நவ.24

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி அடுத்த புதூர் பகுதியை சேர்ந்தவர் ராம மூர்த்தி. இவர் பந்தல் அமைக்கும் தொழில் செய்து வருகிறார். இந்த நிலையில் இவருக்கு இரு தினங்களுக்கு முன்பு வங்கியில் இருந்து அழைப்பு வந்துள்ளது.

அழைப்பின் அடிப்படையில் அங்கே சென்று கேட்ட போது இவருடைய பெயரில் சென்னையில் ராமமூர்த்தி டிரேடர்ஸ் என்ற பேரில் நிறுவனம் நடந்தி வருவதாகவும், அந்த நிறுவனத்தில் 5 கோடி ஜி. எஸ்.டி வரி நிலுவையில் உள்ளதாக தெரிவித்தனர். அதிர்ச்சி அடைந்த ராம மூர்த்தி சம்பவம்குறித்துநகரகாவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார். அப்போது புகாரை பெற காவல்துறையினர் மறுப்பு தெரிவித்து இது குறித்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் அளிக்க கூறி அனுப்பி வைத்தனர்.

கடந்த மூன்று நான்கு ஆண்டுகளாக ஆம்பூர், வாணியம்பாடி ஆகிய பகுதிக



ளில் பல ஏழை எளிய நபர்களுக்கு பல கோடி ரூபாய் ஜி.எஸ்.டி வரி ஏய்பு நோட்டீஸ் வந்துள்ளதாகவும் அவர்கள் காவல் துறை மற்றும் ஜிஎஸ்டி அலுவலக அதிகாரிகளை சந்தித்து புகார் கொடுத்தாலும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது தான் நிதர்சனமான உண்மை.

ஆகையால் ஆவண மோசடிகளில் ஈடுபடும் நபர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சமூக ஆர்வலர் மற்றும் பொதுமக்கள் அரசுக்கு கோரிக்கை வைத்துள்ளனர்.

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002.
Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH



தருமபுரி கலெக்டர் அலுவலகத்தில் சிப்காட் தொழில் நிறுவனங்களுக்கான கண்காட்சி நடைபெற்றது. இந்த கண்காட்சியில் சிப்காட் நிர்வாக மேலாளர் செந்தில்ராஜ், மாவட்ட ஆட்சித் தலைவர் ஆர்.சதீஷ் கலந்து கொண்டு கண்காட்சியை திறந்து வைத்து பார்வையிட்டனர். நிகழ்ச்சியில் எம்பி ஆ.மணி, எம்எல்ஏக்கள் எஸ்.பி.வெங்கடேஸ்வரன், வே.சம்பத்குமார், ஏ.கோவிந்தசாமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் மாவட்டம் 74 விழுப்புரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட விழுப்புரம் ஜான்டூவி மேல்நிலைப்பள்ளி வாக்குச்சாவடி மையத்தில் நடைபெற்றுவரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் முகாமினை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான், நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் விழுப்புரம் நகராட்சி ஆணையர் எம்.ஆர்.வசந்தி, விழுப்புரம் நகர் நல அலுவலர் பிரியா உட்பட பலர் உள்ளனர்.

# நாட்றம்பள்ளி பகுதியில் நலன் காக்கும் ஸ்டாலின் முகாம்!

## கலெக்டர், எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தனர்!!



நாட்றம்பள்ளி நவ.24

திருப்பத்தூர் மாவட்டம். திருப்பத்தூர்.அடுத்து நாட்றம்பள்ளி பகுதியில் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நலன் காக்கும் ஸ்டாலின் பதினாறாவது முகாமினை திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் சிவசௌந்தரவல்லி. ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் தேவராஜ் ஆகியோர் நலன் காக்கும் ஸ்டாலின் முகாமினை தொடங்கி வைத்தனர்

பின்னர் ஏழை எளிய மக்களுக்காக உருவாக்கப்பட்டது என்று ஜோலார் பேட்டை சட்டமன்ற உறுப்பினர் கூறினார் பின்னர் முதலமைச்சர் காப்பீட்டு திட்டம் மாற்றுத்திறனாளிக்கான காது கேளாறு கருவி. ரத்த பரிசோதனை. மற்றும் சக்கரை.

புற்றுநோய் கண்டறியும் கருவி. ஸ்கேன். மாற்றுத்திறனாளிக்கான உபகரணங்கள் போன்றவை இங்கு வழங்கப் படும் என தெரிவித்தனர் இந்த நிலையில் ஏழை எளிய மக்கள் இதனை பயன்படுத்திக் கொண்டு நாட்றம்பள்ளி சுற்றியுள்ள சுமார் 15க்கும் மேற்பட்ட கிராமங்களில்இருந்து ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இந்த முகாமில் கலந்து கொண்டு பயன்பெற்று வருகின்றனர்

இந்த நிகழ்ச்சியின் சிறப்பு அழைப் பாளராக நாட்றம்பள்ளி மாவட்ட சேர் மன். ஒன்றியச் செயலாளருமான என் கே ஆர் சூரியகுமார். நாட்றம்பள்ளி பேரூராட்சி தலைவி சசிகலா சூரி குமார். மாவட்ட சுற்றுச்சூழல் அமைப் பாளர் சிங்காரவேலன் இளைஞர் அணி திமுக கீர்த்தி.

திமுக நிர்வாகிகள் மற்றும் பொதுமக் கள் பலர் நிகழ்ச்சி கலந்து கொண்டு சிறப்பித்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் எஸ்ஐஆர் குறித்து தூத்துக்குடி திமுக பகுதி செயலாளரிடம் விசாரித்தார்!

தூத்துக்குடி நவ.24

தமிழகத்தில் சட்டமன்ற தேர்தலுக்கு சில மாதங்களே உள்ள நிலையில், தற்போது வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தை தேர்தல் ஆணையம் அமல்படுத்தியுள்ளது. வாக்காளர்கள் கணக்கீட்டு படிவங்களை நிரப்பும் முறை குறித்து பொதுமக்களிடையே பல்வேறு குழப்பங்கள் நிலவி வருகின்றன. 2002ம் ஆண்டு வாக்காளர் விவரங்களைத் தேடுவது அவர்களுக்கு மிகுந்த சிரமமாக உள்ளது. இப்பணியில் ஈடுபடும் ஊழியர்களுக்கு போதிய கால அவகாசம் இல்லை. அவர்கள் தங்கள் வழக்கமான பணியை முடித்துவிட்டு, கணக்கீட்டு படிவங்களை வழங்கி திரும்பப் பெறும் பணிகளை செய்து வருகின்றனர். பொதுமக்கள் தங்கள் விவரங்களை கவனத்துடன் நிரப்பி, வரும் டிச.4ம் தேதிக்குள் அந்தந்த வாக்குச்சாவடி நிலை அலுவலர்களிடமோ அல்லது அங்கீகரிக்கபட்ட அரசியல் கட்சிகளின் வாக்குச்சாவடி முகவர்களிடமோ வழங்கலாம்.

அவ்வாறு திரும்ப வழங்கும் போது, நிரப்பிய இரண்டு படிவங்களில் ஒன்றை தங்களிடம் அத்தாட்சியாக வைத்துக் கொண்டு, மற்றொன்றை தேர்தல் அலுவலரிடம் வழங்க வேண்டும். பின்னர் டிச.9ம் தேதி வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் போது தங்கள் வாக்கு சேர்க்கப்பட்டுள்ளதா என்பதை சரிபார்த்து கொள்ள வேண்டும். வாக்கு சேர்க்கபடாவிட்டால் மீண்டும் சேர்த்திட நடவடிக்கை எடுக்க வேண்டும். பொதுமக்கள் தங்கள் வாக்குரிமை பறிபோகாத வகையில் பாதுகாக்க விழிப்புடன் செயல்பட வேண்டும். வடக்கு மாவட்ட திமுக சார்பில் தூத்துக்குடி தொகுதியில் பொதுமக்களுக்கு உதவிடும் வகையில் தன்னார்வலர்களைக் கொண்டு உதவி மையங்கள் அமைக்கப் பட்டுள்ளன.

மேலும் வரும் 22ம் தேதி (சனிக்கிழமை) அனைத்து வாக்குச்சாவடிகளிலும் நடைபெறும் சிறப்பு முகாம்களையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கூறியிருந்த நிலையில் தூத்துக்குடி அண்ணாநகா் பகுதிக்குட்பட்ட 10 வாா்டுகளிலும் நடைபெறும் பணிகள் குறித்து திமுக தலைவரும் தமிழக முதலமைச்சருமான முக.ஸ்டாலின் பகுதி செயலாளர் ரவீந்திரனிடம் இதில் அதிககவனம் செலுத்தி முழுமையாக தன்னை ஈடுபடுத்திக் கொண்டு பணியாற்ற வேண்டும். என்று கேட்டுக்கொண்டாா். எந்த நேரத்திலும் முதல்வா்டமிருந்து ஆன்லைன் அழைப்பு மூலம் தொடா்பு கொண்டு பேசும் நிலை வரும் என்பதால் எல்லோரும் கவனமாக பணியாற்றி வருகின்றனா்.

## தூத்துக்குடியில்

# 2 பேர் மீது குண்டர் தடுப்புச் சட்டம் பாய்ந்தது!

தூத்துக்குடி,நவ.24

தூத்துக்குடியில் கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட 2 பேர் இன்று குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டனர்.

தூத்துக்குடியில் கடந்த 20.10.2025 அன்று நடந்த கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட தூத்துக்குடி சுந்தரவேல்புரம் பகுதியைச் சேர்ந்த நைனார் மகன் ஹரிகரன் (23) மற்றும் கோபாலகிருஷ்ணன் மகன் கார்த்திக் (21) ஆகிய 2 எதிரிகளை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆல்பர்ட் ஜான் பரிந்துரையின்படி மாவட்ட ஆட்சித்தலைவர் கே. இளம்பகவத் உத்தரவின் பேரில் இன்று வடபாகம் காவல் நிலைய போலீசார் குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

இந்த ஆண்டு இதுவரை 128பேர் குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இளம் பெண் மாயம்!

மதுரை, நவ. 24

மதுரை ஆண்டாள் புரம் ஓது வார் மடம் தெருவில் குடியிருக் கும்ஜானகி மகள் ஹர் (19) கடந்த 19ஆம் தேதி அருகில் இருக் / கும் கடைக்குச் சென்று வருவதாக கூறி வெளியே வீடு இது சென்றவர் திரும்பவில்லை. குறித்து அவரது தாய்ஜானகி சுப்பிரமணியபுரம் காவல் நிலையத்தில் புகார் அளித் பதிவு செய்து போலீசார் ததை தொடர்ந்து வழக்கு தேடி வருகின்றனர்.

# திருவெண்ணைநல்லூர் அருகே சாலையோரமாக கொட்டப்பட்ட மருத்துவ கழிவுகள்!

## துர்நாற்றம் வீசுவதால் நோய் தொற்று ஏற்படும் அபாயம்!!



விழுப்புரம்நவ.24

விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணைநல்லூர் பெரிய ஏரியின் கரையோர பகுதிகளில் மருத்துவக் கழிவுகள் கொட்டப்பட்டு எரிக்கப்பட்டு வருவதாக அப்பகுதி மக்கள் குற்ற ச் சாட்டு தெரிவித்துள்ளனர். திருவெ ண்ணைநல்லூரில் இருந்து பெரியசெவலை செல்லக்கூடிய சாலையின் வலது புறமாக திருவெண்ணைநல்லூர் பெரிய ஏரி இருந்து வருகிறது. இந்த ஏரியின் கரை ஓரங்களில் சட்டத்திற்கு புறம்பாக சில மர்ம நபர்களால் மருத்துவ கழிவுகள் கொட்டப்பட்டு எரிக்கப்பட்டு வருவதாக குற்றச்சா ட்டு எழுந்துள்ளது. பாதி எரிந்த நிலையில் நோயாளிகளுக்கு போடப்படும் ஊசி, மாத்திரைகள், கையுறைகள் போன்றவை கிடந்து ள்ளது. இது குறித்து மா வட்ட நிர்வாகம் உரிய விசாரணை மேற்கொண்டு மருத்துவ கழிவுகளை கொட்டிய நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்து ள்ளனர்.



திருவெண்ணெய்நல்லூர் வட்டாரத்திற்கு உட்ட பெரியசெவலை மின்நிலையத்திற்கு உட்பட்ட டி.கொளத்தூர் ஆதி திராவிட பகுதியில் குடியிருப்பு மற்றும் விவசாய நிலையத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் மின்கம்பம் சாய்ந்த நிலையில் அபாயகரமாக உள்ளது.

## IPVS விழாவில் IE4 & IE5

# அடுத்த தலைமுறை பம்பிங் தீர்வுகளை அறிமுகப்படுத்திய ஷக்தி பம்ப்ஸ்!

சென்னை, நவ.24



இண்டஸ்ட்ரியல் பம்ப்ஸ் அண்ட் வால்வ் சிஸ்டம் (IPVS) கண்காட்சியில் ஷக்தி பம்ப்ஸ் (இந்தியா) லிமிடெட், IE4 & IE5 PMSM மோட்டார்களால் இயக்கப்படும் அடுத்த தலைமுறை சூப்பர் பிரீமியம் மற்றும் அல்ட்ரா பிரீமியம் எரிசக்தி திறன் கொண்ட தொழில்துறை பம்புகளை அறிமுகப்படுத்தியது. மூன்று நாள் கண்காட்சி முழுவதும் உற்பத்தி, நீர் மேலாண்மை, உட்கட்டமைப்பு மற்றும் செயலாக்கத்துறை களின் முக்கிய பங்குதாரர்களுடன் நிறுவனம் தீவிரமாக இணைந்தது. அதிக மின்சாரச் சேமிப்பு, மேம்பட்ட செயல்திறன் மற்றும் நீண்ட நாள் நிலை ஆற்றல் ஆகிய அம்சங்கள் கொண்ட இந்நவீன பம்பிங் அமைப்புகள், தொழில்களின் பணி செலவை குறைத்து செயல் திறனை உயர்த்தும் திறன் உள்ளது நிறுவனம் விளக்கியது. ஷக்தி பம்ப்ஸ் நிறுவனம் பேச்சாளர் திரு. ஹர்ஷத் மெய்தா தெரிவித்ததாவது: "IPVS கண்காட்சி எங்கள் தொழில்நுட்ப முன்னேற்றங்கள் வெளிப்படுத்திய முக்கிய தளமாக இருந்தது. IE4 மற்றும் IE5 PMSM மோட்டார்களுடன் அறிமுகமான புதிய அமைப்புகள், இந்தியாவின் தொழில்துறை வளர்ச்சி மற்றும் நிலைத்தன்மை இலக்குகளை ஆதரிக்கும் வகையில் உருவாக்கப்பட்டவை," என்றார்.



கிருஷ்ணகிரி மாவட்டம் கிருஷ்ணகிரிஅதிமுக நாகோஜனாஹல்லி பேரூராட்சி கழகம் சார்பில் பூத்கமிட்டி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் வேலம்பட்டி சமுதாய கூடத்தில் நடைபெற்றது. சட்டமன்ற உறுப்பினருமான கே.பி.முனுசாமி, கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட கழக செயலாளர் அசோக்குமார் பங்கேற்றனர்.



வாணியம்பாடி மருதர் கேசரி ஜெயின் மகளிர் கல்லூரியில் 2026 சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு வாக்கு எண்ணும் மையம் அமைப்பது குறித்து மாவட்ட ஆட்சியர் அதிகாரிகளுடன் நேரில் ஆய்வு செய்தார்.

# புரளி மூலம் குளிர்காய நினைப்பவர்கள் எண்ணம் நிறைவேறாது!

## அமைச்சர் கீதாஜீவன் சாடல்!!

தூத்துக்குடிநவ.24

தமிழகத்தில் புரளிகள் மூலம் குளறுபடிகளை ஏற்படுத்தி குளிா்காய நினைப்பவா்கள்எண்ணம்நிறைவேறாது நலத்திட்ட உதவிகளை வழங்கி மீனவா் தின விழாவில் அமைச்சர் கீதாஜீவன் கூறினார்.

தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக மீனவரணி சாா்பில் உலக மீனவா் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற படகு போட்டியில் வெற்றி பெற்றவா்களுக்கு பாிசளிப்பு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவிற்கு வடக்கு மாவட்ட திமுக செயலாளரும் சமூகநலன் மற்றும் மகளிர் உாிமைத்துறை அமைச்சர் கீதாஜீவன் தலைமை வகித்தாா். மாவட்ட மீனவரணி செயலாளரும் தமிழ்நாடு மீனவா் நலன் வாாிய உறுப்பினருமான அந்தோணிஸ்டாலின், கவுன்சிலா் ரெக்ஸ்லின், மீனவரணி துணை அமைப்பாளர்கள் ஸ்மைலன், ஜேசையா, மாதவடியான், பெப்பின்காகு, தலைவா் அந்தோணி ராஜ், துணைத்தலைவர் அந்தோணி ராஜ், மாநகர தலைவர் ரமேஷ், துணைத்தலைவர் குமாா், துணை அமைப்பாளர்கள் நேவிஸ், ஜெனிபா், நீக்குலாஸ், ராஜா, ஜான்சன், ஆகியோா் முன்னிலை வகித்தனா்.

அமைச்சர் கீதாஜீவன் படகு போட்டியில் முதலிடம் பெற்ற ராஜீக்கு ரூ25ஆயிரம், இரண்டாம் இடம் பிடித்த விஜயனுக்கு ரூ 15 ஆயிரம், 3ம் இடம் பிடித்த ராஜேஷ்கும் ரூ 10 ஆயிரம் போட்டியில் கலந்து கொண்ட 11 பேருக்கு ஆறுதல் பாிசாக தலா ரூ 5 ஆயிரம் 5 நபருக்கு தையல் மிஷின், 100 பேருக்கு அலுமினிய டவேரா, 5 பேருக்கு ஐஸ் பாக்ஸ், ஆகியவற்றை வழங்கி பேசுகையில் மீனவர்கள் நலனில் அக்கறை கொண்ட திமுக அரசு மீனவர்கள் நலனில் அக்கறை கொண்டுள்ளது.மீனவர்களின்நீண்டநாள் கோாிக்கையான தனக்கான ஒரு வங்கி திறக்கப்பட்டுள்ளது. மீன்பிடித்தடைக்கால நிவாரணம் உயர்த்தி வழங்கப்படுகிறது. பிற்படுத்தப்பட்டோரை மிகவும் பிற்படுத்தப்பட்டவராக கலைஞர் ஆட்சியில் அறிவிக்கப்பட்டதின் மூலம் நம்முடைய பிள்ளைகள் கல்வி வேலைவாய்ப்பு மருத்துவதுறை போன்ற வற்றிலும் மொிட் மூலம் தேர்வு செய்யப்பட்டு பணியாற்றி வருகின்றனர்.

கலைஞர் வழியில் தளபதியார் ஆட்சியில் எல்லோருக்கும் எல்லாம் என்ற திராவிட மாடல் ஆட்சி நடைபெறுகிறது. 65 வயதில் நிரம்பியவா்களுக்கு ரேஷன் பொருட்கள் வீடு தேடி வருகிறது. இப்படி ஒவ்வொரு திட்டத்தையும் தமிழக மக்களின் நலன் கருதி முதலமைச்சா் தளபதியா் செயல்படுத்தி வருகிறாா். தமிழகம்எல்லாவகையிலும்வளர்ச்சியடைந்து வருவதை பொறுத்துக்கொள்ள முடியாத பாசிச குரூப்புகள் எஸ்ஐ ஆர் என்ற சிறப்பு தீவிர வாக்கு திருத்தம் மூலம் நம்முடைய வாக்கு உாிமையை பறிக்கும் செயலில் ஈடுபடுகிறது.

அதற்கு நாம் இடமளித்துவிட கூடாது. அனைவரும் ஒற்றுமையாக கலாச்சாரம் பண்பாடுகளை பின்பற்றி வருகிறோம் ஜாதியின் பெயராலும் மதத்தின் பெயராலும் நம்மை பிாித்தாலும் சூழ்ச்சியை சிலா் மேற்கொள்ள நினைக்கின்றனா் அது ஒரு நாளும் தமிழகத்தில் நிறைவேறாது பல்வேறு வகையில் புரளிகளையும் குளறுபடிகளையும் ஏற்படுத்த வேண்டும் என்று ஒரு கும்பல் உலா வந்து கொண்டு திமுக கூட்டணியில் பிாிவினையை ஏற்படுத்தலாம் என்று நினைக்கின்றனா். அது ஒரு காலமும் நடைபெறாது என்று பேசினார்.

# ராஜபாளையம் வழக்கறிஞர் ராம் சங்கர் ராஜா வாத திறமைக்கு கிடைத்த மத்திய அரசின் அங்கீகாரம்!

## மத்திய அரசின் சிறப்பு வழக்கறிஞராக மேலும் 3 ஆண்டுகளுக்கு நீட்டிப்பு செய்து மத்திய அரசு உத்தரவு!

ராஜபாளையம் நவம் 24

ராஜபாளையத்தைச் சேர்ந்த தில்லி உச்ச நீதிமன்ற வழக்கறிஞர் ராமசங்கர்ராஜா ஏற்கனவே மூன்று ஆண்டுகள் மத்திய அரசின் சிறப்பு வழக்கறிஞராக 2022 ஆண்டு நியமிக்கப்பட்டார் அவரது பதவிக்காலம் நவம்பர் 2025 வரை இருந்தது. அவரது வாத திறமையை அங்கீகரிக்கும் விதமாக அவருக்கு பதவி உயர்வு தந்து மேலும் மூன்று ஆண்டுகளுக்கு மத்திய அரசு நியமித்து உத்தரவு பிறப்பித்துள்ளது.



ராஜபாளையம் தர்மாபுரம் ஸ்ரீமாப்பிள்ளை விநாயகர் கோவில் நண்பர்கள் நற்பணி மன்ற செயலாளரான டாக்டர் ராம் சங்கர்ராஜா ஏற்கனவே மத்திய அரசின் கெயில் நிறுவனம், அகில இந்திய பார் கவுன்சில், தமிழ் நாடு அம்பேத்கர் சட்ட பல்கலை கழகம், தமிழ் நாடு மற்றும் புதுச்சேரி பார் கவுன்சில், ஆதி திராவிடர் நல துறை, தமிழ்நாடு மெர்கன்டைல் வங்கி

என பல்வேறு அரசு மற்றும் தனியார் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் வழக்கறிஞராக உச்ச நீதிமன்றத்தில் பணியாற்றி வருகிறார்.

2012 ஆண்டு சட்ட படிப்பை முடித்து உச்ச நீதிமன்றத்தில் வழக்கறிஞராக பணி செய்ய துவங்கி 2015 குற்றவியல் துறையில் சட்ட மேல் படிப்பையும் 2020ல் சட்டத்துறையில் முனைவர் பட்டமும் பெற்றார். சட்ட படிப்பில் உயர் மற்றும் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் நியமனம் குறித்து ஆராட்சி செய்து முனைவர் பட்டம் பெற்றார். தற்போது உள்ள நீதிபதிகள் நியமன நடை முறையை கடுமையாக எதிர்த்து தனது அறிக்கையை தாக்கல் செய்தார்.

கங்கை கரையில் உள்ள குப்பைகளை அகற்ற கோரியும், நீதிபதிகள் நியமனம் பற்றி மக்கள் அறிய வேண்டும் என்றும் பொது நல வழக்குகள் தாக்கல் செய்து நல்ல உத்தரவுகளை பெற்றார்.

இன்று உச்ச நீதி மன்றதின் வலைதலத்தில் நீதிபதிகள் நியமனம் மற்றும் மாறுதல் சமந்தப்பட்ட கொலிஜியம் அமைப்பின் செய்யலாடுகளை மக்கள் அறிய காரணமாக இருந்தவர் ராம் சங்கர்ராஜா. இவர் தொடுத்த வழக்கிற்கு பின்னரே இந்த பகுதி மக்கள் அறிய உச்ச நீதிமன்றதின் வலைதளத்தில் கொண்டு வர பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ராஜபாளையம் நகருக்கு பெருமை சேர்க்கும் விதமாக

மத்திய அரசின் சிறப்பு வழக்கறிஞராக மேலும் மூன்று ஆண்டுகளுக்கு நியமனம் செய்யப்பட்டுள்ள டாக்டர் ராம்சங்கர்ராஜாவுக்கு ராஜபாளையம் ஸ்ரீமாப்பிள்ளை விநாயகர் கோவில் நண்பர்கள் நற்பணி மன்ற தலைவரும் சமூக சேவகருமான ராமராஜ், தொழிலதிபர் டைகர்சம்சுதீன் உட்பட பலர் வாழ்த்துக்களை தெரிவித்தனர்.



## வரும் சட்டமன்றத் தேர்தலில் திமுக கூட்டணியில் அதிக இடங்கள் மதிமுக செயல்வீரர்கள் கூட்டத்தில் தீர்மானம்!

ஸ்ரீவில்லி நவ.24

ஸ்ரீவில்லிபுத்தூர் தெற்கு ரத வீதி தனியார் திருமண மண்டபத்தில் விருதுநகர் மேற்கு மாவட்ட மதிமுக செயல் வீரர்கள் கூட்டம் சாத்தூர் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் ஏ ஆர் ஆர் ரகுராமன் தலைமையில் நடைபெற்றது மாவட்ட செயலாளர் ப.வேல் முருகன் வரவேற்புரை ஆற்றினார்.

கூட்டத்திற்கு ஸ்ரீவில்லிபுத்தூர் நகர செயலாளர் ஜெயக்குமார் மாவட்ட அவைதலைவர் சுகேந்தர் மாவட்ட பொருளாளர் குணசேகரன் மாவட்ட துணை செயலாளர்கள் பரசுராமன் ராஜேந்திரன் ராமர் பிரியங்கா நகர்மன்ற உறுப்பினர் முரளி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் தேர்தல் நிதி சீட்டினை வழங்கி மாநில துணைப் பொதுச் செயலாளர் மு ராஜேந்திரன் அரசியல் ஆலோசனை குழு செயலாளர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிப்பிப்பாறை அ.ரவிச்சந்திரன் சொத்து பாதுகாப்பு குழு உறுப்பினர் கே விநாயகமூர்த்தி அரசியல் ஆய்வு மைய உறுப்பினர் குமரேசன் தீர்மான குழு உறுப்பினர் தாமோதர கண்ணன் கொள்கை பரப்பு துணைச் செயலாளர் பாண்டுரங்கன் தலைமை செயற்குழு உறுப்பினர் பாலகிருஷ்ணன் மாநில இளைஞரணி துணைச் செயலாளர் மாரிமுருகன் மாநில மருத்துவ அணிதுணைச் செயலாளர் டாக்டர் தமிழ்மணி மாநில சிறுபான்மை அணி துணைச் செயலாளர்கள் காதர் மைதீன் மரிய செல்வம் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர் கூட்டத்தில் ரஷ்யா உக்ரைன் போரில் சிக்கித் தவித்த தமிழக இளைஞர் கிஷோர் சரவணனை மீட்டு அவர் ஊருக்கு வரவழைத்த திருச்சி நாடாளுமன்ற உறுப்பினர் துரை வைகோவிற்கு கூட்டத்தில் பாராட்ட தெரிவித்தும் 2026 சட்டமன்றத் தேர்தலில் திமுக கூட்டணியில் மதிமுக அதிக இடங்களை பெற்று போட்டியிடவும் தனிச்சின்னத்தில் போட்டியிட்டு அங்கீகாரத்தை மீட்கவும் ஜனவரி 2 முதல் 12ம் தேதி வரை திருச்சி முதல் மதுரை வரை இயக்க நிறுவனர் வைகோ ஏற்பாடு செய்துள்ள நடை பயணத்திற்கு நன்றி தெரிவித்தும் மாவட்ட அளவில் ஏராளமான நிர்வாகிகள் கலந்து கொள்வது

என்றும் வரும் சட்டமன்றத் தேர்தலில் நிதி சாத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ரகுராமன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிப்பிப்பாறை ரவிச்சந்திரன் ஆகியோர் உதவியுடன் மாநில மாவட்ட ஒன்றிய நகர பேரூர் கிளைக் கழக நிர்வாகிகள் அனைத்து நிர்வாகிகள் கழக நிர்வாகிகள் அதிகப்படியான நிதி வசூல் செய்து தலைமைக் கழகத்திற்கு வழங்குவது எனவும் தீர்மானிக்கப்பட்டது கூட்டத்திற்கு கான ஏற்பாடுகளை விருதுநகர் மேற்கு மாவட்ட மதிமுக மாவட்ட செயலாளர் ப. வேல்முருகன் தலைமையில் சிறப்பாக செய்யப்பட்டிருந்தது

## உலக சாதனைக்காக ஐம்பெரும் காப்பியங்களை எழுதிய மாணவன்!



நத்தம், நவ,24

பெங்களூரு யூனிட்டி யுனிவர்ஸ் புக்ஸ் ஆப் ரெக்காட்ட்ஸ் நிறுவனம் காணொளி மூலமாக உலக சாதனை முயற்சிக்காக நேற்று தமிழ்அன்னை உருவ படத்தில் ஐம்பெரும் காப்பியங்கள் மற்றும் பாடல்களை ஒவிய வடிவில் எழுதும் போட்டியை நடத்தியது. இதில் திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அசோக்நகரை சேர்ந்த குழந்தைவேலு மகனும் நத்தம் ராம்சன்ஸ் பள்ளி 8ம் வகுப்பு மாணவனுமான சுஜய் கலந்து கொண்டு 6 அடி நீளமுள்ள தமிழ்அன்னை படத்தில் ஐம்பெரும் காப்பியங்கள் மற்றும் பாடல்களை எழுதும் பணியை தனது வீட்டில் தொடங்கினார். காலை 7 மணிக்கு எழுத தொடங்கிய மாணவன் இரண்டரை மணி நேரத்தில் தமிழ்அன்னை படத்தில் அனைத்தையும் எழுதி சாதனை படைத்தார். தொடர்ந்து உலக சாதனை முயற்சியில் ஈடுபட்ட மாணவனை பெற்றோர்களும், ஆசிரியர்களும் பாராட்டினர்.



விழுப்புரம். முஸ்லிம் மக்கள் கழகத்தின் நிறுவனத் தலைவர் முனைவர் ச.சுஜைனுதீன் அவர்கள் திராவிட முன்னேற்ற கழக துணை பொது செயலாளர் முன்னாள் அமைச்சர் பேராசிரியர் முனைவர் க. பொன்முடி அவர்களை அவரது இல்லத்தில் மரியாதை நிமித்தமாக நேரில் சந்தித்து நடைபெற இருக்கும் ஆலோசனைக் கூட்டத்தை தெரிவித்து பூங்கொத்துடன் பழங்கள் மற்றும் சால்வை அணிவித்தார். இந்த நிகழ்வின்போது, மாநில இளைஞரணி தலைவர் வி. விக்ரம், விழுப்புரம் மாவட்ட விவசாய அணி செயலாளர் சு.ஏழுமலை, காணை ஒன்றிய இளைஞரணி செயலாளர் ஆ.மணிகண்டன் ஆகியோர் உடன் இருந்து சிறப்பித்தனர்.

## திருப்பூர் வாவி பாளையத்தில் தெருமுனைப் பிரச்சாரம்!



திருப்பூர்,நவ.24

திருப்பூர் மாநகர் மாவட்ட அம்மா பேரவையின் சார்பாக, மாவட்ட அம்மா பேரவை செயலாளர் அட்லஸ் லோகநாதன் தலைமையில், திருப்பூர் வடக்கு சட்டமன்ற தொகுதி, நெருப் பெரிச்சல் பகுதி கழகம், 5வது வார்டு, வாவிபாளையம் ரவுண்டானா பகுதியில் 10 ஆண்டுகால அம்மா அவர்களின் ஆட்சியில் தமிழகத்தில் நிறைவேற்றப்பட்ட சாதனை திட்டங்களையும், ஆளும் தமிழக அரசு பதவி ஏற்ற இந்த 4.5 ஆண்டுகளில் பொதுமக்கள், விவசாயிகள் வியாபாரிகள் மற்றும் அனைத்து தரப்பினருக்கு ஏற்பட்டுள்ள இன்னல்களை துண்டு பிரசுரங்களாக அச்சிட்டு திருப்பூர் மாநகர் மாவட்டக் கழகச் செயலாளர் பொள்ளாச்சி. ஜெயராமன் எம்எல்ஏ வீடு வீடாக சென்று பொதுமக்களுக்கு வழங்கி திண்ணை பிரச்சாரத்தில் ஈடுபட்டார் திருப்பூர் வடக்கு சட்டமன்ற உறுப்பினர்.கே.என்.விஜயகுமார் முன்னிலை வகித்தார் நெருப்பெரிச்சல் பகுதி கழக செயலாளர் நாச்சிமுத்து வரவேற்புரையாற்றினார்.5வது வார்டு கழக செயலாளர் கோவிந்தராஜ்,மாமன்ற உறுப்பினர் இந்திராணி ஆனந்தன் ஆகியோர் நன்றி உரையாற்றினார். இந்நிகழ்வில்,மாமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அன்பகம் திருப்பதி,மாமன்ற எதிர்க்கட்சி கொறடாவுமான கண்ணப்பன்,மாநில எம்.ஜி.ஆர் மன்ற துணை செயலாளர் பட்டுகவுண்டர் மாவட்ட கழக இணைச் செயலாளர் திருமதி. சங்கீதா சந்திரசேகர், மாவட்ட கழக துணைச் செயலாளர் .பூலுவபட்டி பாலு. பகுதி கழக செயலாளர்கள் ஹரிஹரசுதன்,சிவளா தினேஷ், மாவட்ட எம்.ஜி.ஆர் இளைஞரணி செயலாளர் .வேல்குமார் சாமிநாதன்,மாவட்ட மகளிர் அணி செயலாளர் திருமதி.சுந்தராம்பாள், மாவட்ட விவசாய அணி செயலாளர் கலைமகள் கோபால்சாமி, மாவட்ட வர்த்தக அணி செயலாளர் பழனிச்சாமி,மாவட்ட சிறுபான்மை பிரிவு செயலாளர் தம்பி மைதீன், மாவட்ட கலைப் பிரிவு செயலாளர் .ரத்தினகுமார், மாவட்ட இலக்கிய அணி செயலாளர் சாமி கணேஷ்,மாவட்ட மீனவர் அணி செயலாளர் யுவராஜ் சரவணன், வார்டு கழக செயலாளர் இமானு வேல்,செல்வராஜ்.மாவட்ட அம்மா பேரவை இணை செயலாளர்கள் ஆண்டவர் பழனிச்சாமி, பெட்ரோல் பங்க் சந்திரசேகர், பழனிவேல், சொர்க்கம் நீதிராஜன்.தாமரை கண்ணன், மர்பி ராஜா, அசோக், பகுதி அம்மா பேரவை செயலாளர் பழனிச்சாமி, தலைமைக் கழக பேச்சாளர்கள் எரியீட்டி சேகர், பாரதிப்பிரியன், பலகுரல் வெள்ளியங்கிரி, மற்றும் மாவட்ட, பகுதி, வார்டு கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், பூத் கிளை நிர்வாகிகள் ஆகியோர் பங்கேற்றனர்.

## நில அளவை அலுவலர்கள் ஒன்றிப்பு சார்பில் தஞ்சை கலெக்டர் அலுவலகம் முன்பு காத்திருப்பு போராட்டம்!



தஞ்சாவூர். நவ.24

தஞ்சை மாவட்ட தமிழ்நாடு நில அளவை அலுவலர்கள் ஒன்றிப்பு சார்பில் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வாயிலில் மாவட்ட தலைவர் தானியேல் மார்க்ஸ் தலைமையில் காத்திருப்பு போராட்டம் நடைபெற்றது.

கோட்டத் தலைவர்கள் செந்தில்குமார், சந்தோஷ், தினேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்டச் செயலாளர் பாரதிராஜன் வரவேற்புரையாற்றினார். காத்திருப்பு போராட்டத்தில் ஆய்வாளர், துணை ஆய்வாளர் ஊதிய முரண்பாட்டை களைத்திட வேண்டும். களப்பணியாளர்களின் நிலம் சார்ந்த அனைத்து பராமரிப்பு பணிகளையும் இணைய வழி உட்பிரிவு பட்டா மாறுதலில் உள்ள பணி குறியீட்டினை குறைத்திட வேண்டும். விதி திருத்தத்தின் மூலம் நில அளவை பதிவேடுகள் துறை உயர் அலுவலர்களின் அதிகாரங்களை பறிக்கும் நடவடிக்கையை கைவிட வேண்டும். புதிதாக உள்ள நகராட்சிகளுக்கு நகர சார் ஆய்வாளர் பணியிடங்களை வழங்க வேண்டும். புல எல்லை மனுக்கள் தொடர்பான இணைய வழி விண்ணப்பத்தில் முதல் நிலை மற்றும் மேல் முறையீடு தொடர்பாக உரிய திருத்தம் கொண்டு வர வேண்டும் என்பன உள்ளிட்ட 18 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி காத்திருப்பு போராட்டம் நடத்தினர். இதில் மாநிலத் துணைப் பொதுச் செயலாளர் ரங்கசாமி, மாநில செயலாளர் ஆரோக்கியசாமி, மாவட்ட தலைவர்கள் திரவியசாமி பார்த்தசாரதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். முடிவில் மாவட்ட பொருளாளர் முருகராஜ் நன்றியுரையாற்றினார்.

## அம்மையநாயக்கனூர் பேரூராட்சி மன்ற கூட்டம்!



வத்தலக்குண்டு,நவ.24–

திண்டுக்கல் அம்மைய நாயக்கனூர் பேரூராட்சியில் மாதாந்திர கவுன்சிலர் கூட்டம் நடைபெற்றது, கூட்டத்திற்கு தலைவர் செல்வராஜ் தலைமை தாங்கினார்.செயல் அலுவலர் பூங்கொடிமுருகு,துணைத் தலைவர் விமல்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.முதன்மை எழுத்தர் விவேக் வரவேற்றார்.கூட்டத்தில் பேசிய தலைவர் செல்வ ராஜ் தெருவிளக்கு, குடிநீர், கழிவுநீர்,சாலைவசதி உள்ளிட்ட அத்தியாவிசய அடிப்படை பணிகளுக்கு முக்கியத்துவம் அளித்து பொதுமக்களின் தேவைகளை,கோரிக்கைகளை உடனுக்குடன் செய்துதர நடவடிக்கை எடுக்க வேண்டும்.மேலும் வளர்ச்சி திட்ட பணிகள் சுழற்சி முறையில் செய்து தர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது,அனைத்து வார்டுகளுக்கும் அனைத்து தேவைகளும் முழுமையாக செய்து தரப்படும் என பேசினார். மேலும் இந்த கூட்டத்தில் கவுன் சிலர்கள் மாரியப்பன், கருணாகரன்,முகமது நசீர், மீனாட்சி,முத்துலெட்சுமி,தேவி, காசியம்மாள்,குணசீலி ஆரோக்கியமேரி, செல்வி, புஸ்பம் உள்ளிட்ட கவுன் சிலர்கள் அலுவலக பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.கூட்ட முடிவில் சுகாதார ஆய்வாளர் செந்தில்குமார் நன்றி கூறினார்.



திருவள்ளூர் மாவட்டம் மற்றும் ஊராட்சி ஒன்றியம், காக்களூர் அரசினர் மேல்நிலைப்பள்ளியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, தூய்மை பாரத இயக்கத்திட்டத்தில் உலக கழிவறை தினத்தை முன்னிட்டு பள்ளி மாணவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப், பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுளை வழங்கினார். உடன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர்/ இணை இயக்குநர் திரு.வை. ஜெயக்குமார். உதவி திட்ட அலுவலர் திகி.நர்மதா. உதவி இயக்குநர் (பயிற்சி) பி.மோகன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஜானகி மற்றும் பி.செல்வகுமார், பள்ளி தலைமை ஆசிரியர் எஸ்.ஜெகதிஸ்வரன் மற்றும் திரளான மாணவ, மாணவியர்கள் உள்ளனர்.



செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் மாநகராட்சி, பல்லாவரம் மறைமலையடிகள் அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்று வரும் வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தப் பணியினை மாவட்ட ஆட்சித் தலைவர் தி.சினேகா, பார்வையிட்டு ஆய்வு செய்தார். இதில், தாம்பரம் வருவாய் கோட்டாட்சியர் முரளி, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருவளர்ச்செல்வி, வட்டாட்சியர் நடராஜன் மற்றும் நிலை அலுவலர்கள், அரசு அலுவலர்கள் உடன் இருந்தனர்.

## ஆண்டிப்பட்டி அருகே சிறுமியை மிரட்டி பாலியல் பலாத்காரம்! போக்சோவில் ஒருவர் கைது!!



ஆண்டிபட்டி நவ.24

தேனி மாவட்டம், ஆண்டிபட்டி அருகே ராயவேலூரைச் சேர்ந்த 15 வயது சிறுமி பாலக்கோம்பை அரசு மேல்நிலைப் பள்ளியில் 10ம் வகுப்பு படித்து வருகிறார். இந்த சிறுமியிடம் அதே ஊரை சேர்ந்த 52 வயதாகும் பிச்சைமணி என்பவர் ஆசை வார்த்தைகள் கூறி சிறுமியை தனது வலையில் விழவைத்தார். அதன்பின்னர் அந்த சிறுமியுடன் பலமுறை பாலியல் உறவு கொண்டதாக கூறப்படுகிறது. இந்நிலையில் இருவரும் தனிமையில் இருந்ததை அதே பகுதியை சேர்ந்த 16 வயது சிறுவன் தனது செல்போனில் படம் பிடித்துள்ளதாகவும், தன் ஆசைப்படி நடக்கவிட்டால் இந்த வீடியோவை சமூக வலைதளங்களில் வெளியிடுவதாக மிரட்டி சிறுமியை அடிபணிய வைத்தார். அதன் பின்னர் அந்த சிறுவனும் சிறுமியுடன் பலமுறை உறவு வைத்தாக தெரிகிறது. இந்நிலையில் கடந்த சில மாதங்களாகவே சிறுமியின் உடல்நிலை பாதிக்கப்பட்டு வந்துள்ளது. இதனை தொடர்ந்து அந்த சிறுமியை அவரது தாயார் ஆண்டிப்பட்டியில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றுள்ளார். அங்கு பரிசோதித்த டாக்டர் சிறுமி கர்ப்பமாக இருப்பதாகவும், அவரை தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும்படியும் கூறியதைக் கண்டு சிறுமியின் தாயார் அதிர்ச்சி அடைந்தார். அதன் பின்னர் அந்த சிறுமியிடம் விசாரித்தபோது நடந்த அனைத்தையும் விவரமாக கூறியுள்ளார். அதனைக் கேட்டு மனம் உடைந்த அவரது தாயார் இந்த சம்பவம் குறித்து ஆண்டிப்பட்டி அனைத்து மகளிர் போலீசில் புகார் செய்தார். இந்த சம்பவம் குறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை செய்ததில் ஆசை வார்த்தைகள் கூறி சிறுமியை ஏமாற்றி உறவு வைத்த பிச்சை மணியையும், சிறுமியை மிரட்டி பாலியல் துன்புறுத்தலில் ஈடுபட்ட சிறுவனையும் போக்சோ வழக்கின் கீழ் கைது செய்தனர். இந்த சம்பவம் ஆண்டிப்பட்டி பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

### டிச.3 உலக மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு

## மாற்றுத்திறனாளி மாணவ, மாணவியர்களுக்கு நடைபெற்ற ஓவியப்போட்டிகள்!

### கலெக்டர் டாக்டர்.மனிஷ் நாரணவரே பார்வையிட்டார்!



திருப்பூர்,நவ.24

டிசம்பர் 03 உலக மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் மாற்றுத்திறனாளி மாணவ, மாணவியர்களுக்கு நடைபெற்ற ஓவியப்போட்டிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். மனிஷ் நாரணவரே பார்வை யிட்டார்கள்.

ஒவ்வொரு ஆண்டும் அனைத்து நாடுகள் மாற்றுத்திறனாளிகள் தினம் டிசம்பர் 03 ஆம் நாள் உலகம் முழுவதும் அனுசரிக்கப்பட்டு வருகிறது. மாற்றுத்திறனாளிகள் தினம் அனுசரிக்கப்படுவதை முன்னிட்டு திருப்பூர் மாவட்டத்தில் உள்ள சிறப்பு பள்ளிகள், அரசு பள்ளிகள் மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளை சேர்ந்த 10 வயது, 11 முதல் 17 வயது, 18 வயது ஆகிய பிரிவின் கீழ் மாற்றுத்திறனாளிகள் மாணவ,மாணவியர்களுக்கான ஓவியப்போட்டிகள் நடத்தப் பட்டது. இப்போட்டிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.மனிஷ் நாரணவரே பார்வையிட்டார்கள்.

மேலும், இப்போட்டிகளில் வெற்றி பெறும் மாணவ, மாணவியர்களுக்கான மாற்றுத் திறனாளிகள் தினமான டிசம்பர் 3 அன்று முதல் பரிசாக ரூ.1000/-, இரண்டாம் பரிசாக ரூ.500/, மூன்றாம் பரிசாக ரூ.250/- பரிசுகள் மற்றும் பாராட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட உள்ளது. மேலும் வெற்றி பெற்ற மற்றும் பங்கு பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு பாராட்டு சான்றிதழ்களும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் சரவணக்குமார் மற்றும் துறைசார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

## விருதுநகர் புத்தகக் கண்காட்சியில் பென்னிங்டன் பள்ளி மாணவர்கள் பங்கேற்பு!



ஸ்ரீவில்லிபுத்தூர்.நவ.24–

விருதுநகரில் தற்போது நடைபெற்று வரும் 4 வது புத்தகக் கண்காட்சியில் பென்னிங்டன் பள்ளி மாணவர்கள் ஆர்வமுடன் பங்கேற்று புத்தகங்களை வாங்கினர். மக்களிடத்தில் வாசிப்பை ஊக்குவிக்க வேண்டும் என்ற அறிவுரை நோக்கத்தோடு, தமிழக அரசின் சார்பில், விருதுநகரில் உள்ள க்ஷத்திரிய வித்தியாசாலையில் 4 வது புத்தகக் கண்காட்சி நடைபெற்று வருகிறது. விருதுநகர் மாவட்டம் மட்டுமின்றி, அருகில் உள்ள பிற மாவட்டங்களிலிருந்தும், பொதுமக்களும், பள்ளிமாணவ, மாணவியர்களும் இதில் மிகவும் ஆர்வத்துடன் கலந்து கொண்டு, புத்தகங்களை வாங்கிச் செல்கின்றனர். ஸ்ரீவில்லிபுத்தூர் பென்னிங்டன் பள்ளி மாணவர்கள் இக் கண்காட்சியில் பங்கேற்று, இங்கு உள்ள ஆயிரக் கணக்கான புத்தகங்களை ஆர்வமுடன் பார்வையிட்டனர். பென்னிங்டன் கமிட்டியின் உபதலைவர் வி. முத்து பட்டர், செயலாளர் தொழிலதிபர் ஏ.எம்.எம். ராதா சங்கர் ஆகியோரின் வழிகாட்டுதலின்படி, ரூ. 35,000/ மதிப்புள்ள புத்தகங்கள் பென்னிங்டன் நூலகத்துக்குக் கொள்முதல் செய்யப்பட்டன. இதற்கான ஏற்பாடுகளை சமூக சேவகர் அம்சவேணி, "மனம் மகிழ" ராஜாராம், ஜெயகுமரன், ஐ.டி.சி. சிவகுமார், "சித்தாந்த ரத்தினம்" கோவிந்தன், வழக்கறிஞர் ரமேஷ் ஆகியோர் செய்திருந்தனர். இந்த பென்னிங்டன் நூலகத்தில், உள்ள 85,000 புத்தகங்கள் அரசு போட்டித் தேர்வுகளுக்குப் படிக்கும் மாணவ, மாணவியருக்கு பெரிதும் உதவிகரமாக உள்ளன.

## பைக் மோதி காயமடைந்த முதியவர் சிகிச்சை பலனின்றி பலி!

நத்தம், நவ,24

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் கோலில்பட்டியை சேர்ந்தவர் ஆதிமூலம்(55).இவரது மனைவி தமிழ்ச்செல்வி(50). இவர்கள் இருவரும் கடந்த 16ம் தேதி இரவு நத்தம் அருகே கோபால்பட்டியில் உள்ள உறவினர் வீட்டிற்கு சென்று விட்டு மீண்டும் ஊருக்கு திரும்பி கொண்டிருந்தனர். நத்தம் தாலுகா அலுவலகம் அருகே வந்து கொண்டிருந்த போது எதிர்பாராத விதமாக கட்டுப்பாட்டை இழந்த பைக் சாலையை கடக்க முயன்ற சீரங்கம்பட்டியை சேர்ந்த அழகுசாமி (60) என்பவர் மீது மோதி சாலையில் கவிழ்ந்தது. இதில் கீழே விழுந்து படுகாயமடைந்த 3 பேரையும் அக்கம் பக்கத்தினர் மீட்டு நத்தம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர்.பின்னர் மேல்சிகிச்சைக்காக 3 பேரும் மதுரை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கபட்டனர். இதில் சிகிச்சை பலனில்லாமல் தமிழ்ச்செல்வி கடந்த 17ம் தேதி இறந்து விட்டார். இந்நிலையில் படுகாயமடைந்து சிகிச்சையில் இருந்த அழகுசாமியும் நேற்று முன்தினம் இரவு சிகிச்சை பலனில்லாமல் இறந்து விட்டார். இச்சம்பவம் குறித்து நத்தம் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.